**செ. கு. எண்: 175** **நாள் : 13.09.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 13.9.2014

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், நஞ்சநாடு – 1 கிராமம், காட்டுக்குப்பை என்னுமிடத்தில் 17.5.2014 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்காக சுரங்க வேலை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மண் சரிந்து விழுந்ததில், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்திராயிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. குருசாமி என்பவரின் மகன் மாரிமுத்து, திரு. ராஜா என்பவரின் மகன் அருண்குமார் மற்றும் திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் ஆனந்தன் ஆகியோர் மண் சரிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியம்பட்டி கிராமம், அருவங்காடு பகுதியில் 18.5.2014 அன்று லாரியில் மண் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மண் சரிந்து விழுந்ததில் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜாமணி மற்றும் திரு. செந்தில்குமார் ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், வன்னிவேலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னராஜ் என்பவரின் மகன் காந்தி 21.5.2014 அன்று இடி தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**